# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 48 — 1973 පෙබරවාරි 23 වැනි සිකුරාදා — 1973.02.23

48 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு பொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 181 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 192 |


*குறிப்பு.*—இலங்கைத் தேசியப் பசிப்பிணி ஒழிப்பியக்க சட்ட மூலமும் நிதி, இலங்கை அரச ஈட்டு வங்கி (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## பதவிகள் — வெற்றிடம்

### “ ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் ”

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமாக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினல் மேலும் 5 சத விகிதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரச சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரியமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்பவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும் தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும், (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1949 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செவதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னராக அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும் போது நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநல்வத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

LRC 2/3/3

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சேவையில் பின்வரும் தற்காலிக பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) பதவி.—பணிப்பாளர் தோட்ட முகாமை (தேயிலை, றப்பர்)—ஆணைக்குழுவின் சேவைத் தரம் II

வேதன அளவுத்திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 1,500—10×50—ரூபா 2,000.

வயதெல்லை.—07.03.73 இல் 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டதாரியாக இருக்க வேண்டும். (விவசாயத் துறையில் பட்டம் பெற்றவர் விரும்பத்தக்கது) இத்துடன் தேயிலை, றப்பர் தோட்ட மேற்பார்வை நிறுவனம் ஒன்றில் குறைந்தது 5 வருட பணிப்பாளர் சேவையில் அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். அல்லது 300 ஏக்கருக்கு மேற்பட்ட தேயிலை, றப்பர் தோட்டமொன்றின் 10 வருட பணிப்பாளராக அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்கு சமமான வேறு பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் தோட்ட மேற்பார்வை நிறுவனமொன்றில் குறைந்தது 10 வருட பணிப்பாளர் சேவையில் அனுபவம் அல்லது 300 ஏக்கருக்கு மேற்பட்ட தேயிலை, றப்பர் தோட்டமொன்றில் 15 வருடம் மேற்பார்வையாளராக கடமையாற்றிய அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சபைகள் முதலியவற்றில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கின் வயது, கல்வித் தகைமைகள் முதலியன தளர்க்கப்படக் கூடும்.

(2) பதவி.—பணிப்பாளர் தோட்ட முகாமை (தென்னை, ஏனைய பயிர்கள்)—ஆணைக்குழுவின் சேவைத்தரம் II.

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 1,500—10×50—ரூபா 2,000.

வயதெல்லை.—07.03.73 இல் 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். (விவசாயத்துறையில் பட்டம் பெற்றவர் விரும்பத்தக்கது) இத்துடன் தோட்ட மேற்பார்வை நிறுவனம் ஒன்றில் குறைந்தது 5 வருட பணிப்பாளர் செயல் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். அல்லது 250 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னை அல்லது வேறு பயிர்ச் செய்கையுடைய தோட்டம் ஒன்றில் 10 வருட பணிப்பாளர் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான வேறு பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் தோட்ட மேற்பார்வை நிறுவனம் ஒன்றில் குறைந்தது 10 வருட பணிப்பாளர் செயல் அனுபவம் அல்லது 250 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னை அல்லது வேறு பயிர்ச் செய்கை தோட்டமொன்றில் 10 வருடம் பணிப்பாளராக கடமையாற்றி அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சபைகள் முதலியவற்றில் கடமை ஆற்றுவோர் விண்ணப்பிக்கின் வயது, கல்வித் தகைமைகள் முதலியன தளர்க்கப்படக் கூடும்).

(3) பதவி—பணிப்பாளர் (காணி விற்பனை)—ஆணைக்குழுவின் சேவைத்தரம் II.

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 1,500—10×50—ரூபா 2,000.

வயதெல்லை.—07.03.73 இல் 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழக விஞ்ஞானப் பிரிவு (தோட்ட முகாமை) பட்டதாரி அல்லது A. R. I. C. S. பட்டத்துடன் காணி மதிப்பீட்டில் 5 வருட அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

அல்லது

சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது அதற்குச் சமமான வேறு பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் காணி மதிப்பீட்டில் 12 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். காணி மதிப்பீட்டு அனுபவத்தில் குறைந்தது 5 வருடம் மேற்பார்வையாளர் தகைமையில் செயல் ஆற்றியவராக இருக்க வேண்டும். விவசாயக் காணி மதிப்பீடுகளில் நிறைந்த அனுபவம் உள்ள விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபன சேவை, சபைகள் முதலியவற்றில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கின் வயது கல்வித் தகைமைகள் முதலியன தளர்க்கப்படக் கூடும்.)

(4) பதவி.—சட்ட உத்தியோகத்தர்—ஆணைக்குழுவின் சேவைத் தரம் III.

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 1,250—10×50—ரூபா 1,750.

வயதெல்லை.—07.03.73 இல் 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—5 வருட அனுபவமுள்ள வழக்குரைஞர் விண்ணப்பிக்கலாம். காணிச் சட்டங்களில் பரந்த அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

அல்லது

10 வருட அனுபவமுள்ள வழக்கறிஞர் விண்ணப்பிக்கலாம். காணிச் சட்டங்களில் பரந்த அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சபைகள் முதலியவற்றில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கின் வயது, கல்வித்தகைமைகள் முதலியன தளர்க்கப்படக் கூடும்.)

(5) பதவி.—கணக்கு ஏட்டுப் பதிவாளர்—ஆணைக்குழுவின் சேவைத்தரம் VII.

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 350—4×15, 10×20—ரூபா 610.

வயதெல்லை.—07.03.73 இல் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் லண்டன் கணக்கு ஏட்டுப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை அல்லது இலங்கை தொழில் நுட்ப கல்லூரியில் கணக்கு ஏட்டுப் பதிவாளர்களுக்கான வர்த்தக உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சபைகள் முதலியவற்றில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கின் வயது, கல்வித்தகைமைகள் முதலியன தளர்க்கப்படல் கூடும்.)

(6) பதவி.—எழுதுவினைஞர் (கணக்கியல்)—ஆணைக்குழுவின் சேவைத்தரம் VI

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 500—10×30, 5×40—ரூபா 1,000.

வயதெல்லை.—01.03.73 இல் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள்.—சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில்( சாதாரண தர) இருதடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி குறைந்தது 5 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் ஒன்று கணிதம், எண்கணிதம் அல்லது கணிதவியலினதாகவும் மற்றது மொழியாகவும் இருத்தல் வேண்டும்.

இத்துடன்

லண்டன் கொள்விலை முகாமைக் கணக்காளர் சோதனையில் முதலாம் இரண்டாம் பகுதிகளில் சித்தியடைந்தவராகவோ அல்லது சேட்டிபைற் கணக்காளர் சங்கத்தின் முதலாம் இரண்டாம் பகுதிகளில் சோதனைகளில் சித்தியடைந்தவராகவோ அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்காளருக்கான மத்திய பகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபனச் சேவை, சபைகள் முதலியவற்றில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கில் வயது, கல்வித்தகைமைகள் முதலியன தளர்க்கப்படல் கூடும்).

(7) பதவி.—எழுது வினைஞர் (கணக்கியல்)—ஆணைக்குழுவின் சேவைத்தரம் VII.

வேதன அளவுத் திட்டம்.—மாதமொன்றிற்கு ரூபா 350—4×15, 10×20—ரூபா 610.

வயதெல்லை.—07.03.73 இல் 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

தகைமைகள்.—சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் தோன்றி 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்று இருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளில் ஒன்று கணிதம், எண்கணிதம் அல்லது கணக்கியலாகவும் மற்றது மொழியாகவும் இருக்க வேண்டும். இதைவிட அரசாங்க சேவை, கூட்டுத்தாபனம், சபை, தனியார் துறை நிறுவனம் ஒன்றில் கணக்கியல் வேலைகளில் குறைந்தது 6 மாதகால அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(குறிப்பு.—அரசாங்க சேவை, கூட்டுத்தாபன சேவை அல்லது சபைகளில் வேலைசெய்யும் உத்தியோகத்தர் விண்ணப்பிக்கில் வயது, கல்வித் தகைமை முதலியன தளர்க்கப்படல்கூடும்.)

## பொது நிபந்தனைகள்

(1) தெரிவு செய்யப்படும் அபேட்சகரது தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் இயைய வேதன அளவுத் திட்டத்தில் உயர்ந்த ஒரு வேதன அடிப்படை வழங்கப்படும்.

(2) அரசாங்க கூட்டுத்தாபன, சபைகள் முதலியவற்றில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உள்ள நிபந்தனைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களுக்கும் உரித்தாகும்.

(4) விண்ணப்பப் பத்திரங்கள் கீழே தரப்பட்ட மாதிரிப் படிவத்திற்கேற்ப அமைய வேண்டும்.

(5) விண்ணப்பப் பத்திரங்கள் குழு அலுவலகத்தில் 07.03.73 ற்கு முன் கிடைக்கக் கூடியதாய் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு பணிமனை,
த. பெ. எண் 1526,
சீ 82, கிறக்கறீஸ் வழி.
கொழும்பு 7,
1973.02.13.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

(1) விண்ணப்பிக்கும் பதவி :————.

(2) முழுப் பெயர் (சொந்தப் பெயர் முதலில்) :————.

(3) அஞ்சல் முகவரி :————.

*(4) பிறந்த திகதி :————.

(5) விண்ணப்பம் கோரும் நாளில் வயது :—
வருடம் :————. மாதம் :————. நாள் :————.

(6) சாதியம் :————.

*(7) தகைமைகள் :—
(i) கல்வித்தகைமை (சித்தியெய்திய பாடங்கள், திகதி, நிறுவனத்தின் பெயர்) :————.
(ii) தொழில் தகைமை (சித்தியெய்திய திகதியும், நிறுவனத்தின் பெயரும்) :————.

*(8) பதவி விவரம் (வகித்த பதவிகளின் முழு விவரங்களையும் அவற்றிற்காக பெற்ற வேதன விவரங்களையும் குறிப்பிடுக) :————.

*(9) அனுபவம் :————.

*(10) பிற திறமைத் தகைமைகள் :————.

*(11) சிங்கள மொழித் தேர்ச்சி :————.

விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையாகுமென இத்தால் உறுதியளிக்கிறேன். இவை யாவும் பத்திர அத்தாட்சிமூலம் நிரூபிக்க முடியும். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித இழப்பீடுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாக வேண்டுமென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

* தகைமைகளை நிரூபிக்கக் கூடிய அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

2-935—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

### கடற்றொழில் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

கடற்றொழில் திணைக்களத்தின் பொல்லநறுவையிலுள்ள நாடுறை நீர் கடற்றொழில் நிலையத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், கொழும்பு 3, என்ற விலாசத்தை வந்தடையவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 மார்ச் 30.

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—1973 மார்ச் 30.

குறிப்பு.—(1) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப் படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால்வரும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(2) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால், அந் நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில் இலங்கைக் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(3) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, தம்மை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. **ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**—

(1) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தவேண்டும். எனினும், நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப்பெறும் வாய்ப்புடையவராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்றவேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகைமையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக்காலத்திலும் அவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

(2) மேலதிகப் பயிற்சியும், அனுபவமும் பெறுதற்பொருட்டு, உத்தியோகத்தர் வெளிநாடு செல்ல வேண்டப்படலாம்.

(3) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படுமிடத்து—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக்கத்துடனும், ஊக்கத்துடனும், கடைப்பிடித்து திருத்தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும் வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங்கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு ;

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிகட்கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும், அதாவது இலங்கைக் குடியரசாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்வப்பகுதியின் கூட்டினாலுமோ இப்பயிற்சி நெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (ஃதாவது—சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள் முதலியன) இலங்கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாக,

இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்காக வழங்கப்படும் சம்பளத்திட்டம் வருமாறு :—ரூபா 7,440 இலிருந்து ரூபா 16,320 வரைசெல்லும். ரூபா 360 வீதம் 10 ஆண்டுகளும், ரூபா 480 வீதம் 11 ஆண்டுகளும் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில், ரூபா 12,000 க்கும் ரூபா 14,880 க்கும் முன் வினைத்திறன்காண் தடையில் நிறுவப்படும். தெரியப்பட்ட அபேட்சகர் ஒரு விதித்த பட்டதாரிப் பட்டமோ அல்லது தமக்குரிய விஞ்ஞான முயற்சித் துறையில் ஒரு உயர்ந்த பட்டமோ, தரத்தகுதித் தேர்வுப் பத்திரமோ பெறுவிடின், ரூபா 11,520 க்குமேல் வருடாந்தச் சம்பளமாகப் பெறத் தகுதியுடையவராகார்.

குறிப்பு.—(1) புதிதாகச் சேர்க்கப்படுகையில் ஒரு உத்தியோகத்தர் அடிப்படை விஞ்ஞானப் பட்டத்திலுந் தரமுயர்ந்த பீ.எச்டி. பட்டமோ அல்லது எம்.எஸ்சி. பட்டமோ உடையவராயிருப்பின், ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 8,520 ஆகவிருக்கும்.

(2) தெரியப்பட்ட அபேட்சகரின் தகைமையும், அனுபவமும், சம்பளச் சலுகைக்குப் பாத்திரமாயிருப்பின், தாபனப் பணிப்பாளரின் உசாவுதலுடன் அவர் அத்தகைய சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 மார்ச் 30 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) இரசாயனவியலை அல்லது தாவரவியலைத் துணையாகக் கொண்டு விலங்கியலில் சிறப்புப் பட்டம் பெற்ற ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

5. கேட்கப்படும்பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. : ஞானஸ்நானச் சான்றிதழோ உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்,

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுரையாளரிடமிருந்தோ போராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள்ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்,

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப்படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. இலங்கைக் குடியரசுச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு, முடிவுறுந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி, இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறுந் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைபற்றி அபேட்சகருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறுவிடின், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கடற்றொழில் அமைச்சு,
காலிமுகம்,
கொழும்பு 3,
1973 பெப்பிரவரி 14.

### கடற்றொழில் திணைக்களம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையில் இடப் பக்கத்து மேன்மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதிவு அஞ்சலில், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. எண். 1707, காலிமுகம், கொழும்பு 3 என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்.)

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(1973 இல் வயது :— ஆண்டு :————. மாதம் : ———— நாள் :————.

4. நாட்டினம் :————.

5. விவாகமானவரா தனியாளரா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.

8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும் விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).

9. தற்போதைய வேலை :————.

10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோவென்க் சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

————,
ஒப்பம்.

திகதி :————.

2-930—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### கடற்றொழில் திணைக்களம்

மீன்பண்ணையியலாளர் பதவிகள்

கடற்றொழில் திணைக்களத்தில் மீன்பண்ணையியலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பின் வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், கொழும்பு 3 என்ற விலாசத்தை வந்தடையவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—1973 மார்ச் 30.

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—1973 மார்ச் 30.

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலுவரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(2) கடல்கடந்த அபேட்சகர்கள் தமது விண்ணப்பப் பத்திரங்களை அவர்கள் விரும்பினால், அந்நாட்டிலுள்ள அல்லது தாம் வதியும் நாட்டுக்கண்மையில் இருக்கும் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்தில், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு, குறிப்பிட்ட தேதிக்குமுன் சமர்ப்பிக்கலாம்.

(3) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தில் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற் பொருட்டு தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும் இலங்கை வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—(1) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரிமையற்றதுமாகும். நியமனம் 3 ஆண்டுக்காலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும். அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செய்யப்படல் வேண்டும். நியமனத்தின்போது இளைப்பாற்றுச் சம்பள உரிமையை பெற்றிருந்த உத்தியோகத்தர் தொடர்ந்தும் அவ்வுரிமையைப் பெறுவார்.

(2) மேலதிகப் பயிற்சியும், அனுபவமும் பெறுதற்பொருட்டு, உத்தியோகத்தர் வெளிநாடு செல்ல வேண்டப்படலாம்.

(3) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படுமிடத்து—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியை பிரமாணிக்கத்துடனும், ஊக்கத்துடனும் கடைபிடித்து திருத்தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும் வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங்கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குச் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு,

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிகட்கும் இயையநடக்கத் தவறின், பயிற்சி நெறியின் முழுச் செலவையும் அதாவது இலங்கைக் குடியரசாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையர்லோ அல்லது அவ்வப்பகுதியின் கூட்டினாலுமோ இப்பயிற்சிநெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற்கப்பட்ட செலவை (அஃதாவது சம்பளம், படி, பிரயாணச் செலவுகள், கட்டணங்கள் முதலியன) இலங்கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப்பேற்பதாக,

இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடவேண்டும்.

3. சம்பள அளவுத்திட்டம்.—இரட்டிய வருடாந்தச் சம்பளம் ரூபா 6,720—12×360 ம் 7×480—ரூபா 14,400 ம், ரூபா 7,800/- ம் ரூபா 11,520 முன்னர் வினைத்திறன்காண் தடை உண்டு.

4. தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) 1973 மார்ச் 30 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தருக்கு இவ்வயதெல்லை பொருந்தாது ;

(இ) விலங்கியல் அல்லது உயிரியலை ஒரு பாடமாகக்கொண்டு விஞ்ஞானப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். கடல்வாழ் உயிரியல் அல்லது நன்னீர்வாழ் உயிரியல் அல்லது மீன் வளர்ப்பியல் பயிற்சி பெற்றிருக்கும் (அல்லது தொடர்பு கொண்டிருக்கும்) பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு.—இத்தொழிலில் பயிற்சியும் மீன்வளர்ப்பியல் முயற்சிகளில் 15 வருடகால அனுபவமும் பெற்றுள்ள திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கல்வித் தகைமைகள் இன்றி விண்ணப்பிப்பதற்கு உரிமையுடையவராவர்.

5. கேட்கப்படும்பொழுது, தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.: ஞானஸ்நானச் சான்றிதழோ அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பத்தாரியின் தகைமைகள், குணம், குறித்த பதவியில் நியமிக்கத் தகுதியுடைமை ஆகியபற்றிய சமீபத்திய மூன்று சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர் இத்துணைப்பிரிவின் கீழ் நற்சான்றிதழ்கள் அனுப்பவேண்டியதில்லை).

குறிப்பு.—இச்சான்றிதழ்களும் நற்சான்றிதழ்களும் திருப்பி அனுப்பப்படமாட்டா.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப்படிவத்துடன் எச்சாதனமோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வுத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு, முடிவுறுந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையுமாறு, நேராக அனுப்பவேண்டும்.

7. விண்ணப்பங்களும், இதுசார்ந்த தொடர்புகளும், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். முடிவுறு தேதியின்பின் 3 வாரங்களுக்குள் ஒப்புதற் கடிதம் பெறுவிடின், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கடற்றொழில் அமைச்சு,
காலிமுகம்,
கொழும்பு 3,
1973 பெப்பிரவரி 14 ம் வ.

### கடற்றொழில் திணைக்களம்
### மீன்பண்ணையியலாளர் பதவிகளுக்கான விண்ணப்பப்படிவம்

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையில் இடப்பக்கத்து மேன்மூலையில் " மீன்பண்ணையியலாளர் பதவிகளுக்கான விண்ணப்பம் " என எழுதிப் பதிவு அஞ்சலில், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. எண். 1707, காலிமுகம், கொழும்பு 3, என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்.)

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(1973 இல் வயது ஆண்டு :————. மாதம் :————. நாள் :————.

4. நாட்டினம் :————.

5. விவாகமானவரா தனியாளரா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.

8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும் விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).

9. தற்போதைய வேலை :————.

10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் அறிந்துள்ளேன்.

————,
ஒப்பம்.

திகதி :————.

2-931—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

### அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் திணைக்களம்
### உதவி இரசாயனப் பகுப்பாளர் பதவிகள்

அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் திணைக்களத்திலுள்ள உதவி இரசாயனப் பகுப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1973 மாச்சு 15

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1973 மாச்சு 26

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவை. 1971.12.24 ஆந் தேதிய 42 ஆம் இலக்கப் பொதுநிருவாகச் சுற்றறிக்கை தொடர்பானது.

(ii) அடுத்த பந்தியில் காட்டப்பட்டுள்ள 11,520 ரூபாவுக்கு முன் வரும் வினைத்திறமைகாண் தடைக்கு மேலான உயர்ச்சி, பெரிய பிரித்தானிய அயர்லாந்தின் அரச இரசாயனக் கழகத்தின் கூட்டு அங்கத்தவராவதில் தங்கியிருக்கிறது.

3. சம்பளம்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ஆண்டுக்குத் திரட்டிய சம்பளம் ரூபா 7,440 ஆகத் தொடங்கி, ரூபா 360 இல் பத்தும் ரூபா 480 இல் பதினொன்றும் ஆண்டு ஏற்றங்களாகக் கொண்டு, ஆண்டுக்கு ரூபா 16,320 வரை செல்லும், ஆண்டுச் சம்பளம் ரூபா 11,520 க்கு முன்னும் ரூபா 14,880 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

குறிப்பு.—(i) நியமனத்தில் சேரும்பொழுது அபேட்சகர் தனது அடிப்படை விஞ்ஞானப்பட்டத்துடன் பெரிய பிரித்தானிய அயர்லாந்தின் அரச இரசாயன கழகத்தின் கூட்டு அங்கத்தவராகவிருந்தால் மேலே குறிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்தில் ஆண்டுக்கு ரூபா 8,520 இல் தொடங்கும் சம்பளத்திற்குத் தகுதியுடையவராவர்.

(ii) பெரிய பிரித்தானிய அயர்லாந்தின் அரச இரசாயன கழகத்தின் கூட்டு அங்கத்தவராகும்வரை, ஓர் உத்தியோகத்தர் மேலே குறிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டத்தில் ஆண்டுக்குக்கு ரூபா 11,520 க்கு மேல் உயர்ச்சிபெற அருகதையற்றவராவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1973.03.15 இல் 20 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.
(அரசாங்க சேவையில் ஏற்கனவே நியமனம் பெற்றுள்ளவர்களைப் பொறுத்தவரையில் வயதின் மேல் எல்லை கவனிக்கப்படமாட்டாது) ;

(இ) (i). அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் இரசாயனப் பாடத்தை விசேடமாகக் கொண்டு முதலாவது, அல்லது இரண்டாவது பிரிவின் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும் ; அல்லது
(ii) பெரிய பிரித்தானிய அயர்லாந்தின் அரச இரசாயனக் கழகத்தில் கூட்டு அங்கத்தவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—இலங்கைப் பல்கலைக்கழக விசேஷ இரசாயனப் பட்டப் பரீட்சைக்குத் தோற்றி, முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். இப்படிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சை முடிவு வந்த ஒரு கிழமைக்குள் தங்களின் முடிவையும், அதில் அவர்கள் பெற்ற பிரிவையும் எனக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். இப்படி அறிவியாதவரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடசாலை அதிபர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும், தொழில் நுட்பத்தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை நீதி அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நீதி அமைச்சு, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

நிகால் ஜயவிக்ரம,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
1973 பெப்ரவரி 7.

2-794—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

**ஆயுர்வேத திணைக்களம்**

தகைமையுள்ள மருத்துவத் தாதிகளுக்கான பதவிகள்

ஆயுர்வேத திணைக்களத்தில் தகைமையுள்ள மருத்துவத் தாதிகளுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தினைப் போல் தயார் செய்து 16.03.1973 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ என்னை வந்தடைய வேண்டும்.

2. **வேதனமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பளமானது ரூபா 3,864—144—6,456. ரூபா 5,736 ற்கு முன்னர் திறமைகாண் தடை உண்டு. சலவைப்படியாக ரூபா 60 ம், காலணிக்குரிய படியாக ரூபா 30 ம் மேலதிகமாக வழங்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பகிரங்க சேவை சேமலாப நிதிக்குச் சந்தாத் தொகை செலுத்துதல் வேண்டும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் திருப்திகரமான சான்றுகளைக் காட்டுதல் வேண்டும். அவர்—I. 16.03.73 ல் 18 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும், II. மருத்துவத் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட திறமைகாண் சான்றிதழ் மூலம் 1949 ம் ஆண்டு 10 ம் இலக்க மருத்துவ (மாற்றியமைக்க) சட்டத்தின் கீழ், இலங்கை மருத்துவச் சபையினுல் தகைமையுள்ள மருத்துவத் தாதியாகப் பதியப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள், தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்கள் (ஞானஸ்நானச் சான்றிதழோ அல்லது கல்விப் பிரமாணங்களுக்கமைய வழங்கப்பட்ட சான்றிதழோ ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) விண்ணப்பதாரியின் குணத்தினைக் குறிக்கும் அண்மையில் பெறப்பட்ட மூன்று குணச்சான்றிதழ் (பிரதிகள்).

(இ) கல்வி மற்றும் தொழிற்றகைமைத் தராதரங்களைக் குறிக்கும் சான்றிதழ்கள், (பிரதிகள்).

6. விண்ணப்பங்கள் யாவும் "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், கொழும்பு 8" என விலாசமிடப்படல் வேண்டுமே தவிர, இத்திணைக்களத்தில் கடமை புரியும் எவ்வூழியருக்கேனும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்வையிடுக.

குறிப்பு.—விண்ணப்பங்களுடன் அனுப்பும் எந்தப் பத்திரங்களும் திருப்பியனுப்பப்படமாட்டாது.

மேலே கூறப்பட்ட தகைமைகளுக்கமையாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது சம்பந்தமான விசாரணைகளுக்குப் பதில் அனுப்பப்படமாட்டாது.

டபிள்யு. பி. வெவேகம,
ஆயுர்வேத ஆணையாளர்.

ஆயுர்வேத திணைக்களம்,
கொழும்பு 8.
1973, பெபுருவரி 09 ந் திகதி

மாதிரி விண்ணப்பப்பத்திரம்

தகைமையுள்ள மருத்துவத் தாதிகளுக்கான விண்ணப்பங்கள்

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்தில்)

2. விலாசம் :————.

3. பிறந்த திகதியும் 1973.03.16 திகதிக்கு வயதும் :————.
(பிறப்புச் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)

4. சாகியம் :————.

5. திருமணமானவரா அல்லது தனியாரா ? ————.

திருமணமானவராயின் :

(அ) திருமணத்திற்கு முன்னர் வழங்கிய பெயர் :————

(ஆ) கணவர் வசிக்கின்றாரா ? :————.

(இ) 1. கணவருடன் வசிப்பவரா ? :————.

2. சட்டபூர்வமாகப் பிரிந்தவரா ? :————.

3. எவ்வாறெனில் :————.

4. கணவரின் தொழில் :————.

5. அவரின் கடமை புரியும் இடம் :————.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

(அ) முதற் பிள்ளையின் வயது :————.

(ஆ) கடைசிப் பிள்ளையின் வயது :————.

6. ஏற்கெனவே சேவையில் இருந்தால் :

(அ) தற்போதைய ஸ்தானம் :————.

(ஆ) கடமை புரிந்த வருடங்கள் :————.

7. கல்வி கற்ற இடமும் சித்தியடைந்த பரீட்சைகளும் :————.

8. தாதியாகப் பயிற்சி பெற்ற இடம் :————.

9. மருத்துவ மாதுவாகப் பயிற்றப்பட்டவரா ? :————.
(பிரதி இணைத்தல் வேண்டும்.)

10. அண்மையில் பெறப்பட்ட மூன்று குணச் சான்றிதழ்கள் :—.

11. தகப்பனார் அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும் :
————.

12. அறிவு.—

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| சிங்களம் :————. | | | |
| தமிழ் :————. | | | |
| ஆங்கிலம் :————. | | | |

13. அரசாங்க சேவையில் முன்னர் அமர்ந்தவராயின் விபரங்கள் :————.

14. தாதியாகப் பயிற்சி செய்வதற்குப் பதியப்பட்ட பதிவு இலக்கம் :————.

நான் சேவையில் திறமையற்றதாகக் கண்டு இளைப்பாறவில்லையென்றும், அரசாங்க சேவையிலோ அல்லது வேறு நிறுவனத்திலிருந்தோ கடமையிலிருந்து நிறுத்தி வைக்கப்படவில்லையென்றும், எந்த ஒரு நீதிமன்றத்திலாவது குற்றவாளியாகக் காணப்படவில்லையென்றும், இவ்விண்ணப்பம் சம்பந்தமாகத் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்தும் விலக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

2-820—23.2.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

சிறுகைத்தொழிற்றிணைக்களம்

தற்காலிக விற்பனை முகாமையாளர் பதவி

ஸ்ரீலங்கா (இலங்கை)க் குடிகளிடமிருந்து, தற்காலிக விற்பனை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணப்படும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973 மார்ச் மாதம் 16 ந் தேதியன்றோ அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—17×144 ம் 4×180—7,320 மாகும்.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(அ) பதவிகள் தற்காலிகமானவையும் உபகாரச் சம்பள உரித்தற்றனவுமாகும். அரசாங்க சேவைச் சகாயநிதிக்கு உதவு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிந்தெடுக்கப்படின் அவரது நியமனம் முதற்கண் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு பதிற்கடமையடிப்படையிலமையும்.

4. கல்வியும் மற்றைய தகைமைகளும் :

(1) பதவியுயர்வு பெறுவோர்க்கு :

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரமும் அல்லது சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் ஆகியவையுட்பட ஆறு பாடங்களில் இருதடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரமும் அல்லது அதற்குச் சமமான அன்றி அதிலுயர்ந்த தகைமைச் சான்றிதழும்,

(ஆ) i. கிராமாபிவிருத்தி. சிறுகைத்தொழிற்றிணைக்களத்தின் குடிசைக் கைத்தொழில் விற்பனை நிலையமொன்றில் உதவி முகாமையாளர் பதவியில் மூன்று வருடங்கட்கு குறையாத சேவையும், அல்லது

ii. கிராமாபிவிருத்தி, சிறுகைத்தொழிற்றிணைக்களத்தின் மேற்பார்வைப் பதவியில் ஐந்து வருடங்கட்குக் குறையாத, தொடர்ச்சியுள்ள திருப்திகரமான சேவை.

குறிப்பு.—வர்த்தகம், விலைப்படுத்தல் ஆகியவற்றோடு தொடர்புறுப் பிரச்சினைகளைக் கையாளும் அறிவும் அனுபவமுமுள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(2) நேரடியாகச் சேர்பவர்கட்கு—

(அ) வர்த்தகத்திற் தகுதித் தேர்வுப் பத்திர (டிப்ளோமா)த்துக்கான இரண்டாவது பரீட்சையில்

அல்லது

(ஆ) பட்டயம் பெற்ற செயலாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில்

அல்லது

(இ) கணக்குப் பதிவாளர்கட்கான உயர்தகைமைப் பரீட்சையிற் சித்தியெய்தியமை.

குறிப்பு : ஓர் பெரிய வியாபார நிறுவனத்தில் முகாமையாளராக அல்லது நிருவாக உத்தியோகத்தராக அனுபவம் பெற்றுள்ளமை விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தான்—

(அ) மிகச் சிறந்த குணப்பண்பும், உடனலமுமுள்ளவரெனவும்,

(ஆ) 1973 மார்ச் மாதம் 16 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும், 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இம்மேல் வயதெல்லை, ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. பின்வரும் ஆவணங்கள் எல்லாவற்றையுமோ அன்றி அவற்றிலெதையாவதோ வேண்டும்போது சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரர் வேண்டப்படுவர்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (கவனிக்கவும் : ஞானஸ்நானச் சான்றிதழோ, உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணங்களுக்கான சட்டக் கோவையின் நோக்கத்திற்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த தகைமைச் சான்றிதழ்

(இ) இரு குணநலச் சான்றிதழ்கள்

(ஈ) தொழின்முறை அல்லது தொழினுட்பம் அல்லது இவ்விரண்டுக்குமுரிய சான்றிதழ்கள்

(உ) சிங்களத்திற் சித்தியெய்திய மிகவுயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

குறிப்பு.—1. விண்ணப்பத்துடன் ஆவணங்களோ அவற்றின் படிகளோ இணைக்கப்படலாகா.

2. வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலோ, உள்ளூராட்சி மன்றங்களிலோ கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாகவே அனுப்பப்படுதல் வேண்டும்.

7. கொழும்பில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தமது செலவிலேயே சமுகமளிக்க விண்ணப்பகாரர் தயாராயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பத்திற் காணும் விபரங்களிலெவையாவது உண்மையற்றவையெனவும், தவறுனவையெனவும், தெரிவுக்கு முன் காணப்படுமிடத்து விண்ணப்பகாரர் தகுதியற்றவராக்கப்படுவதுடன், அத்தவறு நியமனத்தின் பின் கண்டு பிடிக்கப்படின் அவர் விலக்கப்படுவார்.

9. அரசவர்த்தமானியின் பகுதி I தொகுதி (II அ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்கட்குப் பொருத்தமான பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை)
சிறுகைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹோமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973, ஜனவரி மாதம் 26 ந் தேதி.

**சிறுகைத்தொழிற்றிணைக்களம்**

தறகாலிக விற்பனை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

கவனிக்கவும்: விண்ணப்பங்கள் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தற்காலிக பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட வேண்டும்.

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)
4. நாட்டினம் :————.
5. மணமானவரா, தனியாளா ? :————.
6. கல்வித் தகைமை அல்லது தொழிற்றுறைத் தகைமை அல்லது இவ்விரண்டும் :————.
7. கல்விக் கூடத்திலிருந்து விலகியது தொடக்கமுள்ள தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சி நெறிகளின் அல்லது இவ்விரண்டினதும் விபரங்கள் :————.
8. இதன் முன் அரசாங்க திணைக்களமொன்றிலோ அரசாங்கக் கூட்டுத்தாபன மொன்றிலோ தொழிலிலமர்ந்திருப்பின் அத்தொழில் நிறுத்தப்படவேண்டிய காரணங்களைக் கூறவும் :————.
9. ஓர் நீதிமன்றத்தில் நீர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தையும், அளிக்கப்பட்ட தண்டனையையும் அது பற்றிய விபரங்களையும் குறிப்பிடவும் :————.
10. நற்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூன்று பேரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னுல் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது தவறுனதாக அல்லது பிழையானதாக, ஆட்சேர்ப்புச் செய்யப்பட முன் காணப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடெதுவுமில்லாப் பதவி நீக்கத்துக்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி 1973.

2-795—23.02.73 ந் தேதிய வர்த்தமானி இல. 48

---

**மட்டக்களப்பு மாவட்டத்தின் கமுணுபுர பகுதியின் பிறப்பு இறப்புப் பதிவாளருக்கும், மண்முனைப்பற்று வடக்குப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி**

மேற்கூறப்பட்ட பதவிக்கு கமுணுபுர பிறப்பு, இறப்புப் பதிவுப் பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண், பெண் இருபாலரிடம் அல்லது அவ்விடத்தை வாசஸ்தலமாகக் கொண்டு அவ்விடம் குடியேறி, அப்பகுதிக்குள் போதிய நலனும் செல்வாக்குமுடைய நபர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் மூடிவடையும் தினத்தன்று விண்ணப்பக்காரர்கள் 21 வயதிற்குக் குறையாதவர்களாகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே, நிரந்தர அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமைவுறுது.

2. கல்வி, தகைமை சம்பந்தமான மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து அல்லது அப்பகுதிக்குள் இருக்கும் பொது இடங்கள், அலுவலகங்கள் அதாவது, பகுதி அரசிறை உத்தியோகத்தரின் அலுவலகம், கிராம சேவையாளரின் அலுவலகம், உள்ளூராட்சிச் சபையினரின் அலுவலகங்கள், கிராமக் கோடுகள், அஞ்சல் அலுவலகங்கள், பொலிசு நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொதுச் சந்தைகள், கூட்டுறவுச் சங்கக் கடைகள் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இவ்வலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த படிவத்தில் எல்லா விண்ணப்பங்களையும் தயாரித்து 1973 மார்ச்சு 23 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ந் திகதி.

2-899—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

**மட்டக்களப்பு மாவட்டத்தின் கமுணுபுரப் பகுதியின் பிறப்பு, இறப்புப் பதிவாளருக்கும் ஏருவூர் கோறளைப் பற்றுப் பகுதியின் (பொது) விவாகப் பதிவாளருக்குமான பதவி.**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோருதல் தொடர்பாக 43 ம் இலக்க 19.01.1973 ந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துசெய்யப்பட்டுள்ளது.

ஆர். பீ. வீரகோன்,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்.
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ந் திகதி.

2-900—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

**கல்வி அமைச்சு**

**மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் அரசாங்க தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தராதரப் பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு**

அரசாங்க தமிழ் மொழிப் பாடசாலைகளில் "தராதரப் பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர்" பதவிகளுக்காக ஆண், பெண் இருபாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விண்ணப்பங்களும் இதன் கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தாம் பதிவாகவுள்ள கல்வி மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதேசக் கல்வி அதிபதிக்கு/பிரதான கல்வி அதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தராதரப் பத்திரமற்ற ஆங்கில உதவி ஆசிரியர் பதவிகள்—தமிழ் மொழிப் பாடசாலைகளில்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. கல்வி மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதேச கல்வி அதிபர்களின்/பிரதான கல்வி அதிகாரிகளின் விலாசங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கல்வி மாவட்டம் | | கல்வி மாவட்டங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் விலாசங்கள் |
|---|---|---|
| அனுராதபுரி | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், அனுராதபுரி. |
| அம்பாறை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், அம்பாறை. |
| பண்டாரவளை | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், பண்டாரவளை. |
| மட்டக்களப்பு | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு. |
| கொழும்பு தெற்கு | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், கிறீன் பாத், கொழும்பு 7. |
| சிலாபம் | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், சிலாபம். |
| கம்பஹா | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், கம்பஹா. |
| காலி | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், காலி. |
| ஹோமகம | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், ஹோமகம. |
| யாழ்ப்பாணம் | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். |
| களுத்துறை | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், களுத்துறை. |
| கண்டி | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், கண்டி. |
| குருநாகலை | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், குருநாகலை. |
| கேகாலை | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், கேகாலை. |
| கல்முனை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், கல்முனை. |
| மாத்தறை | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், மாத்தறை. |
| மொனராகலை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், மொனராகலை. |
| மாத்தளை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், மாத்தளை. |
| மன்னார் | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், மன்னார். |
| நுவரெலியா | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், நுவரெலியா. |
| பொலன்னறுவ | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், பொலன்னறுவ. |
| இரத்தினபுரி | ... | பிரதேசக் கல்வி அதிபர், கல்வித் திணைக்களம், இரத்தினபுரி. |
| தங்காலை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், தங்காலை. |
| திருகோணமலை | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், திருகோணமலை. |
| வவுனியா | ... | பிரதான கல்வி அதிகாரி, கல்விக் காரியாலயம், வவுனியா. |

குறிப்பு.—விண்ணப்பதாரி தமது பதிவினை நிரூபிக்கும் முகமாக தாம் வதியும் பிரதேச பிரிவுக் காரியாதிகாரியால் வழங்கப்பட்ட பதிவு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியைத் தமது விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(அ) (i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்தற்றவையுமாகும்.

(ii) நியமதாரி தமது சம்பளத்திலிருந்து அரசினர் சேவைச் சகாய நிதிக்குக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(iii) தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(iv) நியமதாரிகள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைக் காரியப்படுத்துவதற்கு, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயல்படுத்துவதற்கு ஏற்றவகையில் ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு அமைதல் வேண்டும்.

(v) இந்நியமனம், அரசினர் சேவை ஆணைக்குழுவின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், பரிபாலனம், நிறுவனக் கைநூலின் பிரமாணங்கள் நியதிகள், இனிமேல் அரசாங்கத்தால் விதிக்கப்படக்கூடிய மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றிற்கு அமைவதாகும்.

(ஆ) இந்நியமனங்கள் யாவும், மாவட்ட சேவைத் திட்டத்திற்கு அமையவே வழங்கப்படுகின்றன. அதற்கமைய நியமிக்கப்படும் நியமதாரிகள் தாம் நியமிக்கப்பட்டுள்ள மாவட்டத்திலேயே நிரந்தரமாகக் கடமை புரிதல் வேண்டும். அவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலாயினும் குறித்த மாவட்டத்துக்கு வெளியே மாற்றம் பெறுவதற்குத் தகைமை பெறமாட்டார்கள். எவ்வாறாயினும் ஒழுங்கு நடவடிக்கையின் பேரிலோ அன்றி சேவையின் தேவையைப் பொறுத்தோ ஒரு மாவட்ட சேவை ஆசிரியரை வேறு ஒரு மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்வதற்குத் திணைக்களத்துக்கு இருக்கும் உரிமை இதனால் பாதிக்கப்படமாட்டாது.

4. சம்பளத் திட்டம்.—இப்பதவிக்கான ஒன்று திரட்டிய சம்பள விகிதம்.—வருடத்துக்கு ரூபா 2,700—21 × 60—3,960 தகுதிகாண் தடை ரூபா 2,880 க்கும் ரூபா 3,360 க்கும் முன்னர் (அடிப்படைச் சம்பளத் திட்டம் வருடத்துக்கு ரூபா 792—21 × 42—1,674 தகுதிகாண் தடை ரூபா 918 க்கும், ரூபா 1,254 க்கும் முன்னர்).

5. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகத் திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடல் நலமும் உடையவரென,

(ஆ) 1973 மார்ச் மாதம் 23 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருப்பவரென,

(இ) பின்வரும் அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமையுடையவரென—

(i) இரண்டு திறமைச் சித்திகளுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்)

அல்லது

(ii) ஆங்கில மொழிமூலம் நான்கு பாடங்களில் சித்தி கொண்ட சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது ஆங்கில மொழி மூலமும் நான்கு பாடங்களில் சித்திகளுடனுனதும் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தமையைக் குறிப்பதுமான கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பத்திரம். அவ்வாறு சித்தியடைந்த பாடங்கள் ஆறில் ஆங்கில மொழி, சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டுவதோடு, இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம், சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் சித்திகளும், இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளும் கொண்டதான சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்தமை குறித்துப் பெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர)ப் பத்திரம்.

அல்லது

(iv) ஆங்கில மொழி, சிங்களம்/தமிழ் மொழி ஆகியன உள்ளடக்கிய மொத்தம் ஆறு பாடங்களில் சித்திகளும் அவற்றில் இரு பாடங்களில் திறமைச் சித்திகளும் கொண்ட சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி மூலம்) அல்லது இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்தமை குறித்த கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பத்திரம் (ஆங்கில மொழிமூலம்).

அல்லது

(v) **இரண்டு** திறமைச் சித்திகளுடன் மொத்தம் **ஆறு** **பாடங்களில்** சித்தியடைந்தமை குறித்த சிரேட்ட **பாட**சாலைத் தராதரப் பத்திரம் அல்லது **இரண்**டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாட**ங்களில்** **சி**த்தியடைந்தமை குறித்து வழங்கப்பட்ட **கல்விப்** பொதுத் தராதர (சாதாரணதரப்) பத்**திரம்**. மேற்கண்ட பரீட்சைகளில் இரண்டு திற**மைச்** சித்திகள் இருப்பதோடு பின்வரும் பாடங்**களும்** அடங்குதல் வேண்டும்.

(அ) சிங்களம்/தமிழ் மொழியில் சித்தியுடன் **ஆங்**கில மொழி "அ" பாடத்திட்டத்**தில் திற**மைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்**டும்**.

அல்லது

(ஆ) சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கில மொழி "ஆ" பாடத்திட்டம் ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) சிங்களம்/தமிழ் மொழி, ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் சித்தியுடன் ஆங்கில மொழி "ஆ" பாடத்திட்டத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(vi) ஆங்கில மொழி "அ" பாடத்திட்டத்தில் சாதாரண சித்தி அல்லது ஆங்கில மொழி "ஆ" பாடத்திட்டத்தில் திறமைச் சித்தி கொண்டதாக சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம்/வர்த்தக எண் கணிதம் ஆகிய பாடங்கள் அட்ங்கியதாகவும் எவையேனும் இரு பாடங்களில் திறமைச் சித்திகள் கொண்டதாக வழங்கப்பட்ட சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் மொத்தம் ஆறு பாடங்களில் சித்தியடைந்தமை குறித்து வழங்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர (சாதார்ணதர)ப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—1. 1969 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் ஆங்கில மொழியில் பெற்றுள்ள சித்தி, 1969 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கியிருந்த ஆங்கில மொழி "அ" பாடத்திட்டத்தின் சித்திக்குச் சமமானதாகும்.

2. மேற்குறிப்பிட்டுள்ள தகைமைகள் விண்ணப்பதாரி இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகைமைகளேயாம். எனினும், விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் அதிசிறந்த செயற்றிறமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

3. மேலே (vi) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்படின், 3 மாதப் பயிற்சியொன்றை மேற்கொள்ள நேரிடும். பயிற்சியின் இறுதியில் நடைபெறும் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் மாத்திரமே பதவி நியமனத்திற்காகக் கவனிக்கப்படுவர்.

(ஈ) இப்பதவிக்கான வெற்றிடங்கள் கஷ்டமான பிரதேசப் பாடசாலைகளிலேயே பெரும்பான்மையாக இருப்பதனால், ஆண் விண்ணப்பதாரிகளுக்கு தெரிவில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(உ) விண்ணப்பதாரிகள் தத்தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் நகல் பிரதிகளை (அசல் பிரதிகளையல்ல) இணைத்தனுப்புதல் வேண்டும்.

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திரங்கள்.

(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்.

(iv) விண்ணப்பதாரியின் பதிவைக் குறித்து அவர் வதியும் பிரதேசக் காரியாதிகாரியால் வழங்கப்பட்ட பதிவு அத்தாட்சிப் பத்திரம்.

குறிப்பு.—மேற்குறித்த சாதனங்களின் நகல் பிரதிகளை இணைத்தனுப்பத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பப் பத்திரங்களும் அவை தொடர்பான ஏனைய சாதனங்களும் இவ்வறிவித்தலின் 1 ஆம் பந்திக்கு அமைய அனுப்பப்படுவதன்றி, இவ்வமைச்சின் அல்லது பிரதேசக் கல்வித் திணைக்களமொன்றின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

7. இவ்வர்த்தமானியின் முதலாம் பகுதியில் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் காணப்படும் அரசினர்சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பான பொது நிபந்தனைகளைக் கவனிக்க.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான கடைசித் திகதியின் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

9. அஞ்சலில் ஏற்படக்கூடிய எவ்விதமான தாமத்தையும் தவிர்க்குமுகமாகத் தத்தமது விண்ணப்பப் பத்திரங்களை முன்கூட்டியே பதிவஞ்சல் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பீ. உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்,
கல்வி மா அதிபரும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
14.2.1973.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**அரசாங்க தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில உதவி ஆசிரியர் பதவிகள்**

விண்ணப்பிக்கும் மாவட்டம் :————

1. முழுப்பெயர் (சொந்தப் பெயர் முதலில்) :————.

2. (i) நிரந்தர விலாசம் :————.
(ii) தேர்தல் தொகுதி :————.

3. நீர் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டவராயின், தேர்தல் தொகுதி :————.

4. ஆணா/பெண்ணா :————.

5. விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரணதர)ப் பரீட்சைக்கு, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றிய (இறுதியாகப்படித்த) பாடசாலை :————.

6. விவாகஞ் செய்தவரா/செய்யாதவரா ? :————.

7. பிறந்த திகதியும் இடமும் :————.

8. 23.3.1973 ஆந் திகதிக்கு வயது :————.

9. (i) விண்ணப்பதாரியின் தகப்பன் பிறந்த இடம் :————
(ii) விண்ணப்பதாரியின் தாய் பிறந்த இடம் :————.

10. சாதியம் :————.

11. இலங்கையராயின் வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா ? :————.

12. தகைமைகள் :—

(1) (அ) சி.பா.த.ப/க.பொ.த.ப.(சா.த) :————.
(ஆ) மொழிமூலம் :————.
(இ) பரீட்சை இலக்கம் :————.
(ஈ) சித்தியடைந்த வருடம் :————.
(உ) பாடங்கள் :————.

| (1) முதல் அமர்வு (வருடம்) | (2) இரண்டாம் அமர்வு (வருடம்) |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |
| 7. | 7. |
| 8. | 8. |

(ஊ) (i) பெற்றுள்ள சித்திகள், அத்தோடு/அல்லது விசேட சித்திகள் தொகை :————.

(ii) திறமைச் சித்திகள், அத்தோடு/அல்லது விசேட சித்திகள் பெற்றுள்ள பாடங்கள்.

| | |
|---|---|
| 1. | 5. |
| 2. | 6. |
| 3. | 7. |
| 4. | 8. |

13. விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவகராக இருந்திருப்பின் அது சம்பந்தமான விபரங்களைத் தருக :————.

1. திணைக்களத்தின் பெயர் :————.

2. வகித்த பதவியும், அப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்துடனுனதுமா என்பது பற்றிய விபரம் :————.

3. நியமனம் பெற்ற திகதி :————.

4. விலகிய திகதியும், விலகியதற்கான காரணமும் :——

5. ஆசிரியராயின் பதிவிலக்கமும், கடைசியாகக் கடமையாற்றிய பாடசாலையும் :————.

14. விசேட உரிமைகள், தகைமைகள் அல்லது அனுபவங்கள் இருப்பின் அவை பற்றி விபரங்கள் :————.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவில்லை அல்லது அனுதாபத்துக்குரிய முறன்பாடெனச் செயற்றிறமையின்மையின் பேரில் பதவியிலிருந்து இளைப்பாற்றப்படவில்லை என்றும் பதவி துறந்தவனெனக் கருதப்படவில்லையென்றும், யான் வம்சாவழி காரணமாக/பதிவு காரணமாக இலங்கைப் பிரசையென்றும் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கு அடங்கியுள்ள விபரங்கள் ஏவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுதற்குமுன்னர் தெரியவரின் நியமனம் பெறத் தகுதியற்றவனுக்கப்படுதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டு பிடிக்கப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————,

(விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது கூட்டுத்தாபன மொன்றில் கடமை புரிபவராக இருப்பின், குறித்த திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஊடாகத் தமது விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்)

........................................ யின் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்றேன். இங்கு புரியும் சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

————,
திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது அவர்கட்குப் பதிலாக அதிகாரம் பெற்றவரின் கையொப்பம்.

பதவி :————.

விலாசம் :————.

திகதி :————.

2-960—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

எனது இல. இஎன் 1/16/73

பொறியியற் சேவைச் சபை

இலங்கைப் பொறியியற் சேவையின் 3 ஆம் வகுப்பு இயந்திர, மின்சார பொறியியலாளர்க்கான வெற்றுப்பதவிகள்

1973, சனவரி மாதம் 19 ஆந் தேதியின் 43 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் செய்திமடலில் வெளியிடப்பட்ட எனது அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய வெற்றுப்பதவிகளுக்கான விண்ணப்பங்களுக்குரிய முடிவுத்தேதி 1973, மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. மகாதேவா,
செயலாளர்,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

பொறியியற் சேவைச்சபை அலுவலகம்,
செயலகம், கொழும்பு—1,
1973, பெப்புரவரி மாதம் 13 ஆந் தேதி.

2-1005—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

---

## பரீட்சைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும் பிறவும்

1972 ம் ஆண்டு நவெம்பர் மாதம் நடைபெற்ற நொத்தாரிசு கடைசிப் பரீட்சை

இதன் கீழே காணப்படும் பெயருடைய அபேட்சகர், அவரின் பெயருக்கு முன்னே கொடுக்கப்பட்டிருக்கும் மொழியில் தொழில் நடத்த நொத்தாரிசு கடைசிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறார் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. பீ. டீ. அல்விஸ், சிங்களம்
2. ரீ. எம். ஏ. பீரிஸ், சிங்களம்
3. டபிள்யு. எல். தொன்தினு, சிங்களம்
4. கே. ஆர். குணதிலக, சிங்களம்
5. டீ. பி. பி. குணதுங்க, சிங்களம்
6. ஜே. ஏ. ஜயகொடி, சிங்களம்
7. சீ. ஏ. ஜயதிஸ்ஸ, சிங்களம்
8. ஆர். எவ். கல்தேரா, சிங்களம்
9. கே. கே. குமாரசிங்க, சிங்களம்
10. எஸ். முணசிங்க, சிங்களம்
11. வை. ஆர். பத்மசிறி, சிங்களம்
12. பீ. ஜீ. பேமபால, சிங்களம்
13. ஆர். ஏ. ஜீ. எஸ். ரணதுங்க, சிங்களம்
14. எஸ். ஏ. சிமியொன் சிங்கோ, சிங்களம்
15. ஏ. ஜீ. சீலவதி, சிங்களம்
16. ரி. பீ. வணிகசூரிய, சிங்களம்
17. எஸ். எச். விமலவீர, சிங்களம்
18. எச். ஏ. விஜேபால, சிங்களம்
19. சீ. ஜே. எஸ். வீத்யாசேகர, சிங்களம்
20. எம். எஸ். பெரேரா, சிங்களம்
21. டபிள்யு. ஏ. சேதன், சிங்களம்
22. எம். விமலதுங்க, சிங்களம்
23. டபிள்யு. சமரவீர, சிங்களம்
24. அமரா சபுகொட்டன, சிங்களம்
25. ஏ. டீ. அம்பதெனிய, சிங்களம்
26. அக்னஸ் விஜேன்திரா, சிங்களம்
27. எல். கே. யு. ஜயதிலக, சிங்களம்
28. எஸ். எம். தனபால, சிங்களம்
29. ஏ. டீ. சந்திரசேன, சிங்க்ளம்
30. எஸ். டீ. ஏ. வணிகசேகர, சிங்களம்
31. எம். டபிள்யு. தயாவதி, சிங்களம்
32. யு. கே. ஆர். சேனநாயக, சிங்களம்
33 டபிள்யு. எஸ். சில்வா, சிங்களம்
34. டி. டபிள்யு. த சில்வா, சிங்களம்
35. ஜே. ஏ. குலரத்ன, சிங்களம்
36. ஜீ. பி. ஜயவர்த்தன, சிங்களம்
37. எம். ஏ. புஞ்சிஅப்புகாமி, சிங்களம்
38. டபிள்யு. யாபாபண்டார, சிங்களம்
39. ஆர். போவேகொட, சிங்களம்
40. டீ. டபிள்யு. பி. அலகம்மா, சிங்களம்
41. ஏ. பீ. அலெக்சான்டர், சிங்களம்
42. ஏ. பீ. சந்திரலதா, சிங்களம்
43. கே. பீ. எஸ். விமலரத்ன, சிங்களம்
44. ஆர். எஸ். கே. சந்திரகாந்தி, சிங்களம்
45. என். ஏ. த சில்வா, சிங்களம்
46. பீ. சீ. எம். பெர்னாந்து, சிங்களம்
47. பீ. டீ. ஆர். சீ. பொன்சேகா, சிங்களம்
48. எம். எல். ஞானசேன, சிங்களம்
49. எச். ஹதின்னபொல, சிங்களம்
50. எச். எம். பீ. ஹேரத், சிங்களம்
51. கே. ஜீ. பி. டபிள்யு ஜயதிலக, சிங்களம்
52. என். ரி. ஜயவர்த்தன, சிங்களம்
53. எம். டி. ஜினவரதாச, சிங்களம்
54. எம். டி. ஐ. லியோ, சிங்களம்
55. எச். எம். மில்ற்ரன், சிங்களம்
56. ஏ. ஜீ. டீ. நாணயக்கார, சிங்களம்
57. வயலட் பண்டித, சிங்களம்
58. பீ. எம். ரீ. பதிராஜ, சிங்களம்
59. ஏ. எஸ். பீரிஸ், சிங்களம்
60. எச். ஆர். ராமவிக்கிரம, சிங்களம்
61. டபிள்யு. எம். என். ராமவிக்கிரம, சிங்களம்
62. டீ. டபிள்யு. உடவத்த, சிங்களம்
63. எஸ். டீ. எல். சந்தநாயக, சிங்களம்
64. டீ. பீ. ஆர். சமரநாயக, சிங்களம்
65. டீ. சமரதுங்க, சிங்களம்
66. ஆர். பீ. சுபசிங்க, சிங்களம்
66. டபிள்யு. டீ. சில்வீனு, சிங்களம்
68. ஏ. டீ. வலண்டயின், சிங்களம்
69. எம். டி. எச். வீரதுங்க, சிங்களம்
70. டபிள்யு. யாபாரத்ன, சிங்களம்

ஹமீட் பாரூக்,
பதிவாளர் தலைமை அதிபதி.

பதிவாளர் தலைமை அதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 7 ந் திகதி.

2-924—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

### கல்வி அமைச்சு

இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களின் கலைமாணி/விஞ்ஞான மாணி (பொது), கலை முதுமாணி (கல்வி)ப் படிப்புகளையும் மருதானை, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியிலும் தெகிவலை, காலி, யாழ்ப்பாணம், கண்டி பல்தொழில்நுட்ப நிலையங்களிலும் வாணிகவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியையும் விவசாயப் பட்டப் பயிற்சி நெறியையும் மேற்கொள்தற்கு பல்தொழில்நுட்ப நிலையப் போதனாசிரியர்களுக்கும் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் படிப்பு லீவு—1973 ஆம் ஆண்டு

இலங்கைப் பல்கலைக் கழக பேராதனை அல்லது கொழும்பு அல்லது வித்தியோதய அல்லது வித்தியாலங்கார வளாக கலைமாணி /விஞ்ஞானமாணி (பொது), கலைமுதுமாணி (கல்வி)ப் பட்டப் படிப்புகளை அல்லது மருதானை, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியினதும் தெகிவலை, காலி, யாழ்ப்பாணம், கண்டி பல் தொழில் நுட்ப நிலையங்களினதும் வாணிகவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியை அல்லது விவசாயப் பட்டப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு உள்ளகப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்கு 1973 ஆம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்படுதற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளவர்களும் பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுமான பல்தொழில்நுட்ப நிலையப் போதனாசிரியர்கள், ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் பாடசாலை அதிபருக்கூடாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "படிப்பு லீவுக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. 1973 ஆம் ஆண்டு உள்ளகப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்கு, பின்வரும் தேவைகளைத் திருப்தி செய்வோர்களுக்கு மட்டுமே படிப்பு லீவு அனுமதிக்கப்படும் :—

(அ) 1.1.73 அன்று 45 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

(ஆ) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் குறைந்த பட்சம் பின்வரும் பாடங்களில் இரண்டில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றைப் பட்டப் பரீட்சைக்கு எடுக்க வேண்டும்.

இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம்

அல்லது

போதனை/குண்டசாலை விவசாயப் பாடசாலையின் தாரதரப் பத்திரம் அல்லது ஹாடி சிரேட்ட தொழில் நுட்பக் கல்லூரித் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஆசிரியாராக ஐந்து வருட சேவை புரிந்திருக்க வேண்டும். மேலும், பொதுத் தகுதிப் பரீட்சையில்/க. பொ. த. (உயர்தர) பரீட்சையில்/விவசாயப் பட்டப் பயிற்சிநெறியைப் பின்பற்றுதற்பொருட்டு திணைக்கள உத்தியோகத்தர்களுக்கென இலங்கைப் பல்கலைக் கழக விவசாய பீடத்தால் நடாத்தப்படும் விசேட பரீட்சையில் சித்தியடைந்ததன் பெயரில் இலங்கைப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் முதல் வருட பயிற்சி நெறியிலிருந்து தவிர்வளிக்கப்பட்டு விவசாயப் பட்டப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது பல்கலைக் கழகம் ஒன்றால் நடாத்தப்படும் பொதுத் தகுதிப் பரீட்சையில் அல்லது இடைமாணிப் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் குறைந்த பட்சம் ஒன்றில் சித்தியடைந்திருப்பதுடன் அதனைப் பட்டப் பரீட்சைக்கு எடுக்க வேண்டும். புவிவரலாற்றியல், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம், புவியியல்.

குறிப்பு.—கலைமுதுமாணி (கல்வி) ப் பட்ட, வாணிகவியல் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளுக்கான அபேட்சகர்களுக்கு மேலுள்ள 2 (ஆ) ஆம் பந்தி அமையாது.

3. பின்வருவோருக்கு படிப்பு லீவு வழங்கப்படமாட்டாது :—

(அ) 2.1.73 அன்று குறைந்த பட்சம் ஒரு வருட சேவையாகுதல் புரிந்திராத ஆசிரியர்கள்.

(ஆ) ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான விசாரணைகள் முடிவுறாத நிலையில் உள்ள ஆசிரியர்கள்.

(இ) இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களில்/இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில்/பல்தொழில்நுட்ப நிலையங்களில் வெளி மாணவர்களாக மட்டும் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள்.

(ஈ) இலங்கைப் பல்கலைக் கழக வளாங்களின் உள்ளக மாணவர்களாக கழகவாண்டு, 1973 இன் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்படாத ஆசிரியர்கள்.

(உ) சிறப்புப் பட்டங்களுக்கு அல்லது பட்டப்பின் பட்டங்களுக்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிகளைப் பின்பற்றும் ஆசிரியர்கள் (கல்வித் தகுதித் தேர்வு அல்லது கலைமுதுமாணி (கல்வி)ப் பட்டப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர்க்கு இக்கட்டுப்பாடு அமையாது)

(ஊ) முறி ஒன்றினை செய்துள்ள ஆசிரியர்கள் (8 வருட காலத்துக்கு இத் திணைக்களத்தில் சேவை புரிவதாகவும் பயிற்சி சம்பந்தமான செலவு ரூபா 10,000 க்கு மேற்படாததுமான ஆசிரியர்கள் படிப்பு லீவு நோக்கத்தின் பொருட்டு 5 வருட முறி ஒன்றினை மட்டுமே செய்துள்ளனர் எனக் கணிக்கப்படுவர். இதற்கிணங்க 8 வருட காலத்திற்கு முறி ஒன்றினைச் செய்து ஆனால், 1.1.73 அன்று 5 வருடங்களைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்குப் படிப்பு லீவு வழங்கப்படமாட்டாது)

(எ) கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு ஐந்து வருடங்களுக்குச் சேவை புரிய வேண்டுமென முறி செய்து இப்போது ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, ஆனால் 1.1.73 அன்று அம்முறியின் கீழ் 3 வருட சேவையைப் பூர்த்தி செய்திராத ஆசிரியர்கள்.

பிரேமதாச உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்
மகா வித்தியாதிபதியும்.

எண் : பொ. நி/17/292/73
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ஜனவரி 31.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

கலைமாணி/விஞ்ஞானமாணி (பொது), கலைமுதுமாணி (கல்வி)/ வாணிகவியல் தகுதித் தேர்வு/விவசாயப் பட்டப் பயிற்சி நெறிக்கு படிப்பு லீவுக்கான விண்ணப்பம்

1. (அ) முழுப் பெயர் :————.
(ஆ) பதவிப் பெயர் :————.
(இ) பால் :————.
(ஈ) தற்போதைய திரட்டிய மாதாந்தச் சம்பளம் :————.

2. பதிவிலக்கம் :————.
(இருப்பின்)

3. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1.1.1973 அன்றுள்ளபடி வயது :————.

4. சொந்த முகவரி :————.

5. ஆசிரியர் தற்போது சேவை புரியும் பாடசாலைப் பெயரும் அதன் முகவரியும் (மாவட்டக் குறியீட்டுடன்) :————.

6. கல்வி/உயர்தொழில் தகைமைகள் :————.

7. (அ) 2.1.1973 வரை உள்ள பூரண சேவை :————.
வருடம் ————. மாதம் :————.

(ஆ) 1.1.73 வரையுள்ள சேவை பற்றிய விபரங்கள் (மாணவ ஆசிரியாராகப் புரிந்துள்ள சேவை புறம்பாகக் குறிப்பிடப்பட வேண்டும்)

| பாடசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

8. ஆசிரியர் கலாசாலை ஒன்றில் யாதேனும் பயிற்சி நெறி பின்பற்றியிருப்பின் பயிற்சி நெறிக்காலத்தையும் கலாசாலைப் பெயரையும் குறிப்பிடுக :————.

ஆசிரியர் கலாசாலை தொடக்கம் வரை

9. அத்தகைய பயிற்சி நெறியைப் பின்பற்றியிருப்பின் அதற்கென செய்யப்பட்ட முறியின் காலம் (பொருத்தமாயின்) :
தொடக்கம் :————. வரை :————.

10. வேறு யாதேனும் பயிற்சி நெறியைப் பின்பற்றினீரா? : (அப்படியாயின் படிப்பு லீவுக் காலமும் நோக்கமும் குறிப்பிட வேண்டும்)
:————.

11. அத்தகைய ஒரு பயிற்சி நெறி தொடர்பில் செய்யப்பட்ட முறியின் காலம் (இருப்பின்) :
தொடக்கம் :————. வரை :————.

12. தற்போது ஆசிரியர் கலாசாலையொன்றில் பயிற்சி நெறி ஒன்றினைப் பின்பற்றிக் கொண்டிருப்பின் அத்தகைய பயிற்சி நெறி ஆரம்பித்த திகதியும் ஆசிரிய கலாசாலையின் பெயரும் :————.

13. *1973 ஆம் ஆண்டு சேர்க்கப்படுதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக் கழக வளாகம்/தொழில்நுட்ப கல்லூரி/பல்தொழில் நுட்ப நிலையப் பெயர் (அத்தகைய தெரிவு அறிவிக்கப்பட்ட கடிதத்தின் பிரதி இணைக்கவும்) :
————.

14. *இலங்கைப் பல்கலைக் கழக வளாகத்தில்/தொழில் நுட்பக் கல்லூரியில்/பல்தொழில் நுட்ப நிலையத்தில் நீர் பின்பற்ற விரும்பும் பயிற்சி நெறியும் மொழிமூலமும் :————.

பாடம் போதனாமொழி

1.
2.
3.
4.

15. *(அ) தொழில்நுட்பக் கல்லூரிப் புகுமுக/க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த வருடமும் சித்தியடைந்த பாடங்களும் :————.

(ஆ) பொதுத் தகுதிப் பரீட்சையில் அல்லது இடைமானிப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களும் வருடமும் :————.

16. பயிற்சி நெறி ஆரம்பிக்கும் திகதி :————.

17. பயிற்சி நெறிக்காலம் :————.

18. (அ) கடந்த 5 வருடங்களுள் உமக்கெதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை நடைபெற்றதா? அங்ஙனமாயின் கல்வித் திணைக்கள/அமைச்சு கடிதங்களின் தொடர்பிலக்கத்துடன் விபரங்கள் கொடுக்கவும் :
————.

(ஆ) உமக்கெதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை விசாரணை முடிவுறாத நிலையில் இருப்பின் கல்வித் திணைக்கள/அமைச்சு கடிதங்களின் தொடர்பிலக்கத்துடன் விபரங்கள் கொடுக்கவும் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள சேவை விபரங்களும் ஏனைய விபரங்களும் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பாடசாலை அதிபரின்/தலைமை ஆசிரியரின்/
தலைமை ஆசிரியையின் கையொப்பம்.

————. வித்தியாலயம்
————1973.

2–920—23.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 48

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை )குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** .. | **2.2.73** | வெள்ளி .. | **24. 1.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **9.2.73** | வெள்ளி .. | **31. 1.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **15.2.73** | வியாழன் .. | **7. 2.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **23.2.73** | வெள்ளி .. | **14. 2.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| **மாச்சு** .. | **2.3.73** | வெள்ளி .. | **21. 2.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **9.3.73** | வெள்ளி .. | **28. 2.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **16.3.72** | வெள்ளி .. | **7. 3.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **23.3.73** | வெள்ளி .. | **14. 3.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **30.3.73** | வெள்ளி .. | **21. 3.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| **ஏப்பிறல்** .. | **6.4.73** | வெள்ளி .. | **28. 3.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **11.4.73** | புதன் .. | **4. 4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **19.4.73** | வியாழன் .. | **11. 4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **27.4.73** | வெள்ளி .. | **18. 4.73** | புதன் .. | ந.ப. **12.00** |

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.